1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த கருத்தை ஒட்டித்தான் அரசு தீவிரமாக பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது.

(ஆ) சேலத்தில் சிமெண்டில் கலப்படம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சேலத்தில் கருங்கல் பொடி தயாரித்து அதை சிமெண்டில் கலப்படம் செய்து அதை வினியோகம் செய்தவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டதால் சிமெண்ட் உபயோகிப்பவர்கள் மத்தியில் எழுந்துள்ள அவதி குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

7–1–1982 அன்று நிலவாரப்பட்டி கிராமத்தை சேர்ந்த பொது மக்களிடமிருந்து தொலைபேசி மூலம் வந்த தகவலின் பேரில் சேலம் வட்ட விநியோக அலுவலர் கிராமத்திற்குச் சென்று விசாரணை நடத்தியதில் சேலத்தைச் சேர்ந்த முனிராஜ் என்பவர் கருங்கல் பொடியை சிமெண்ட் பைகளில் கட்டி சிமெண்ட் என விற்க முயற்சி செய்ததாகவும் இதன் தொடர்ச்சியாக கோபால் மற்றும் பழனிசாமி என்ற இரண்டு நபர்க்கு 26 மூட்டைகளை ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம் விற்பனை செய்து விட்டதாகவும் தெரிந்தது. இதற்கிடையில் உள்ளூர் பொது மக்கள் எழுப்பிய சந்தேகத்தின் விளைவாக இந்த மூட்டைகள் யாவும் உண்மையான சிமெண்ட் அல்ல என்றும் அதற்கு மாறாக இவை போலி சிமெண்ட் என்றும் தெரியவந்ததால் பழனிசாமிக்கு மட்டும் சிமெண்ட் மூட்டைகளுக்குப் பெறப்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு சிமெண்ட்டை விற்ற நபர்கள் ஓடிவிட்டதாகவும் பொது மக்கள் இவர்களை விரட்டியதில் பெருமாள் என்ற ஒரு நபர் மட்டும் சிக்கியதாகவும் தெரிந்தது. பெருமாளை விசாரித்ததில் சேலம் லைன்மெட்டைச் சேர்ந்த முனிராஜ் என்பவர்தான் இந்த சிமெண்ட் மூட்டைகளைத் தயாரிப்பவர் என்றும் இவரிடம் பெருமாள் கூலிவேலை செய்வதாகவும் சம்பவத்தன்று முனிராஜ் மற்றும் பெருமாள் ஆகியவர்களுடன் மற்ற இரண்டு ஆண்களும் டெம்போவில் வந்ததாகவும் தெரிய வந்தது. வட்ட விநியோக அலுவலரின் தணிக்கையின் போது பெருமாள் மட்டுமே இருந்தார். ஆகையால் அவரையும், சிமெண்ட் மூட்டைகள், அவற்றை ஏற்றி வந்த டெம்போ, ஆகியவற்றையும் முறைப்படி கைப்பற்றி மேல் நடவடிக்கைக்காக மல்லூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

2 இந்த வழக்கை மல்லூர் காவல் இ.பீ.கோ. 420 மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் சட்ட பிரிவுகள் 7 (1) (எ) (11) ஆகியவற்றின் கீழ் வழக்கு ஒன்று பதியப்பட்டுள்ளது. அத்துடன் பெருமாள் என்பவரையும் கைது செய்து சேலம் முதல் வகுப்பு இணை நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். இந்த சிமெண்ட்டை தயாரிப்பவரும் உரிமையாளருமான முனிராஜ் என்பவரும் மற்ற இரண்டு நபர்களும் தலைமறைவாகி விட்டதாலும் அவர்களது சரியான விவரங்கள் தெரியாததாலும் அவர்களை காவல்துறையினர் தேடி வருகின்றனர். மாதிரி சிமெண்ட் எடுத்து பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

3 இந்த ஒரு சம்பவத்தைத் தவிர இம்மாவட்டத்தில் இது போன்ற சம்பவங்கள் வேறு எதுவும் நிகழவில்லை. பொது மக்களிடம் இதைப்போன்ற பீதி எதுவும் இல்லை எனலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலப்பட சிமெண்ட் விற்ற கூலியாள் தான் கைது செய்யப்பட்டுள்ளார். சிமெண்ட் கலப்படம் செய்தவர் சிக்கவில்லை என்ற காரணத்தால், கலப்படம் செய்த அந்த நபரின் போட்டோவை பத்திரிகைகளில், டெலிவிஷன், சினிமா ஸ்லைடுகள் போன்றவற்றின் மூலம் வெளியிட்டு, அவரைப் பிடித்துக் கொடுப்பவருக்கு 5009 பரிசு தரப்படும் என்ற வகையில் அறிவிப்புச் செய்து, அவசியமானால் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காவல் துறையினர் நிர்வாகத் திறமையும், வேலையில் புகழும் பெற்றவர்கள், எனவே குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சேலத்தில் கருங்கல் பொடி வேறு சில உபயோகத்திற்காக பெரிய பெரிய தொழிற்சாலைகளில்; அதிக அளவில் தயார் செய்யப்படுகிறது.

சிமென்டில் கலப்படம் செய்வதற்கு இந்தக் கருங்கல் பொடி ஒரு வாய்ப்பாக இருப்பதால் அப்படி கருங்கல் பொடி தயாரிப்பதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சிமெண்டில் கருங்கல் பொடியை கலப்பதற்கு யாருக்கும் அரசு அனுமதி கொடுப்பதில்லை. தவறு செய்பவர்களைக் கவனிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS